பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

[illegible]: இரா. செழியன் எம். ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: வைகாசி 12 (25—5—68) சனி ★ வெளியூர்: வைகாசி 13 (26—5—68) ஞாயிறு [இதழ்: 286

## தமிழகத் தொழிலாளர் வாழ்க்கைச் செலவு

### புதிய குறியீட்டெண் தயாரிப்பு

கோவை, மே 25—

"தமிழகத் தொழிலாளருக்குப் புதிய வாழ்க்கைச் செலவுக் குறியீட்டு எண் தயாரிக்கப்பட்டிருக்கிறது; இது, அடுத்த திங்களில் நடைபெறவிருக்கும் மாநிலத் தொழிலாளர் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் வைக்கப்படும்"

என்று அமைச்சர் செ. மாதவன் தெரிவித்தார்.

# நிலமில்லாதவர்கட்கு நிலம் வழங்கத் தமிழக அரசின் புதிய ஏற்பாடு

## மேய்ச்சல் நிலம் ஒதுக்கும் விதியை நீக்கிவிட முடிவு

### அமைச்சர் கே. ஏ. மதியழகன் அறிவிப்பு

மதுரை, மே 24—

"கிராமப்புறங்களில் ஒவ்வொரு கால்நடைக்கும் ஓர் ஏக்கர் நிலம் வீதம் மேய்ச்சலுக்காக வைத்துக்கொள்ளலாம் என்று இருந்துவந்த விதியை நீக்கிவிடத் தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது.

"நிலமில்லாத ஏழைகட்கு நிலம் வழங்க வசதியாக இருக்கும் பொருட்டே தமிழக அரசு இந்த மசோதாவை மேற்கொண்டிருக்கிறது"

என்று உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் இங்கு தெரிவித்தார்

அமைச்சர் மேலும் இது தொடர்பில் கூறியதாவது:—

"இந்த விதி, பல ஆண்டுகட்கு முன்பு நிறைவேற்றப்பட்டதாகும். கிராமங்களில் ஒவ்வொரு கால் நடைக்கும் ஓர் ஏக்கர் நிலம் வீதம் கணக்கிட்ட பிறகுதான் எஞ்சியுள்ள நிலத்தை புறம்போக்காக அறிவிக்கமுடியும்.

"தற்போது ஆயிரக்கணக்கான மனித உயிர்கள் தலைக்கு ஓர் ஏக்கர் நிலம் கூடப் பயிரிடுவதற்கு இல்லாமல் இருந்து வருகின்றனர். இந்த நிலையில், 'மாடுகளுக்கு மேய்ச்சல் நிலம்' என்னும் பேரால் தலைக்கு ஓர் ஏக்கர் என்பது தேவையில்லை எனக்கருதித்தான் இந்த விதியை நீக்கிவிட முடிவு செய்துள்ளோம்.

"இந்த நடவடிக்கை மூலம் ஏராளமான நிலத்தைப் புறம்போக்காக அறிவித்து, அவற்றை ஏழைகளுக்கு வழங்க முடியும்."

## தாலுகாக்களிடை உணவுத் தானியப் போக்குவரத்து

### தடையை நீக்குவது பற்றி அரசு ஆலோசனை

மதுரை, மே 24

"தாலுகாக்களுக்கிடையே உணவுத் தானியப் போக்குவரத்தைத் தடுத்து நிறுத்துவதற்கென உள்ள கண்காணிப்புச் சாவடிகளை, எல்லா மாவட்டங்களிலும் எடுத்து விடுவது பற்றி அரசு தீவிரமாகச் சிந்தித்து வருகிறது.

"சம்பா நெல் கொள்முதல் கிட்டத்தட்டக் குறியளவை எட்டிவிட்டதால், இந்தச் சாவடிகளை நீக்கிவிடலாம் என்று அரசு எண்ணியுள்ளது"

என்று உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன், இன்று இங்கு தெரிவித்தார்.

"மாநிலம் முழுவதிலும் கொள்முதல் செய்யவேண்டிய குறியளவு 5 இலட்சம் டன் என நிர்ணயிக்கப்பட்டது; அதில் 4.6 இலட்சம் டன் இதுபோது கொள்முதல் செய்யப்பட்டுவிட்டது" என்றார் அமைச்சர்.

"முதலமைச்சர் அண்ணா அவர்களுடனும், உணவு வழங்கு துறை உயர் அதிகாரிகளுடனும் கலந்தாலோசித்த பின், கண்காணிப்புச் சாவடிகளை அகற்றுவது பற்றி முடிவு செய்யப்படும்" என்றார் அமைச்சர்.

வேளாண்மை அமைச்சர்

## ஏ. கோவிந்தசாமி உடல் நிலை

சென்னை, மே 24—

உடல்நலக் குறைவு ஏற்பட்டதால் சென்னைப் பொது மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெற்றுவரும் தமிழக வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி அவர்களின் உடல் நிலை தேறி வருகிறது. இன்னும் இரண்டு வார காலத்துக்கு மருத்துவமனையிலேயே தங்க வேண்டியிருக்கும் என்றும், அதன் பிறகும் சிறிது காலத்துக்கு முழு ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் மருத்துவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

# குடுமியான்மலையில் சீரணித் தொண்டர்களின் சாதனை.

## முதலமைச்சர் அண்ணா பெருமிதம்--பாராட்டு

திருச்சி, மே 24—

குடுமியான்மலையில் சீரணியினர் ஆற்றியிருக்கும் அரும் பணிகள் பற்றி முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் பெருமிதத்துடன் பாராட்டுத் தெரிவித்திருக்கிறார்கள்.

திருச்சியிலிருந்து 35 மைல் தொலைவில் உள்ள குடுமியான் மலையில், தமிழக அரசின் பலநோக்கு வேளாண்மை பண்ணை அமைக்கப்பட்டுள்ளது. (அங்கே, அண்ணா அவர்கள், நீர்த்தெளிப்புப் பாசன முறையைத் துவக்கி வைத்தது நினைவிருக்கலாம்.)

விழாவில் கலந்துகொண்டு மீட்டுத் திரும்பிய அண்ணா அவர்களிடம் செய்தியாளர்கள், அந்த வேளாண்மைப் பண்ணை குறித்துக் கேட்டதற்கு அண்ணா தெரிவித்ததாவது;—

"எட்டு மாத காலத்திற்குள் நிலத்தைப் பண்படுத்த மகத்தான முன்னேற்றத்தைக் காட்டியுள்ளனர். பழைய தூர்ந்துபோன ஏரியைச் செப்பனிட்டும், கரைகள் அமைத்தும், புதிய சாலைகள் அமைத்தும் அதிகாரிகளின் உதவியுடன் பணியாற்றியிருக்கின்றனர் — சீரணித் தொண்டர்கள்!

"அவர்களுடைய பணி எனக்கு மெத்த மகிழ்ச்சியையும் மன நிறைவையும் அளிக்கிறது.

"அங்கு 2,500 ஏக்கர் நிலப்பரப்பில் பெரிய பண்ணை அமைய இருப்பதை விரைவில் காண விரும்புகிறேன்.

# மூடப்பட்ட பஞ்சாலைகளை ஏற்க அரசு நடவடிக்கை

## தொழில் வளர்ச்சி--ஒழுங்குமுறைச் சட்டப்படிக் குழு ஆராயும்

### அமைச்சர் செ. மாதவன் விளக்கம்

கோவை, மே 25—

"தமிழகத்தில் மூடப்பட்டுள்ள ஆலைகளின் நிலவரத்தை ஆராயத் தமிழக அரசு ஒத்துக்கொண்டிருக்கிறது; இதர பல பிரச்சினைகளையும் தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் இடம்பெறும் குழு ஒன்றின்மூலம் ஆராயவும் அரசு உறுதி கூறியிருக்கிறது.

'தொழிற் சங்கங்கள் கோரியுள்ளபடி, பஞ்சாலைகளை அரசே ஏற்பதற்கு அவசரச் சட்டம் ஏதும் தேவையில்லை; தற்போதுள்ள சட்டத்தின்கீழ், மூடப்பட்டுள்ள ஆலைகளை எடுத்துக் கொள்வதற்கு அரசுக்கு அதிகாரங்கள் உள்ளன.

"மூடப்பட்டுள்ள ஆலைகளில், கட்டுப்படியாகக்கூடிய ஆலைகளை—தொழில் வளர்ச்சி ஒழுங்குமுறைச் சட்டத்தின்கீழ் மாநில அரசே ஏற்று நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி விசாரணை நடத்தும்படி தமிழக அரசு உத்தரவிடும்.

"தொழில் வளர்ச்சி— ஒழுங்குமுறைச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள குழுவிடம், மேற்சொன்ன பணியைக் கவனிக்கும்படி, உத்தரவிடுமாறு மத்திய அரசை, தமிழக அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது; இக்குழு தனது பணியை விரைவில் நிறைவு செய்ய இயலும் வகையில், தொழிற் சங்கத் தலைவர்கள் ஒத்துழைப்பர் என நம்புகிறேன்"

என்று, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் செ. மாதவன் அவர்கள், இங்கு குறிப்பிட்டார். இது பற்றிச் செய்தியாளர்களிடம் மேலும் அவர் கூறியிருப்பதாவது:—

### நடவடிக்கை எடுக்க அரசு தயங்காது!

"அரசாங்க ஊழியர் இன்ஷ்யூரன்சு, பிராவிடண்டு நிதி போன்றவைகளுக்குப் பணம் செலுத்தாத ஆலைகள் சம்பந்தப்பட்ட வரையில், பெரும் அளவில் நிதித் தொல்லையில் உள்ள ஆலைகளிடம் தாராள மனப்பான்மை காட்டுவது அரசின் கொள்கையாகும்; ஆனால் பாக்கியைச் செலுத்தும் நிலையில் உள்ள ஆலைகள் பாக்கியைச் செலுத்தவில்லை என்று புகார் ஏதாவது வருமானால் நடவடிக்கை எடுக்க அரசு தயங்காது!"

### தன்னிச்சையாக அரசு நடவடிக்கை எடுக்காது

"விற்பனை வரியில் குறைப்பு அல்லது மின்சாரக் கட்டணத்தில் குறைப்புமூலம் ஆலைகளுக்கு ஏதாவது நிவாரணம் அளிக்க அரசு உத்தேசித்துள்ளதா?"

என்று கேட்டபோது அமைச்சர் குறிப்பிட்டதாவது:—

"மத்திய அரசும் ஒத்துழைத்தாலன்றி மாநில அரசு தன்னிச்சையாக நடவடிக்கை எதையும் எடுக்காது.

"பேச்சுவார்த்தைகளின் பலனாக அனைத்துத் தொழிலாளர் சங்கத் தலைவர்களுக்கும் மன நிறைவு ஏற்பட்டிருக்கக்கூடும்; எனவே அவர்கள், வேலைநிறுத்தத்தைக் கைவிடுவர் என நம்புகிறேன்."

### வேலைநிறுத்தத்தைத் திரும்பப்பெற்றனர்

கோவை, மே 24—

நேற்று நள்ளிரவு முதல் துவங்கிய பொது வேலைநிறுத்தத்தை தேசியப் பஞ்சாலைத் தொழிலாளர் யூனியனும் (இ. தே. தொழிற்சங்கக் காங்கிரசுடன் இணைந்தது), ஐக்கிய பஞ்சாலைத் தொழிலாளர் சங்கமும் இன்று காலையில் திரும்பப் பெற்றுக் கொண்டன.

திருச்சியில் முதலமைச்சர் அண்ணா அவர்களுடனும், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் செ. மாதவன் அவர்களுடனும் இன்று காலை பேச்சுவார்த்தை நடத்தியதைத் தொடர்ந்து வேலைநிறுத்தம் திரும்பப் பெறப்பட்டது.

வேலைநிறுத்தத்தினால் சுமார் 40 ஆலைகள் பாதிக்கப்பட்டன.

## குழு நியமிக்கத் தமிழக அரசு முடிவு

### தலைவரை நியமிக்க டெல்லியிடம் கோரிக்கை

திருச்சி, மே 24--

"தமிழகத்தில் மூடப்பட்டிருக்கும் 15 நெசவாலைகளின் பிரச்சினைகள் குறித்து விசாரணை நடத்த மத்திய அரசுடன் கலந்தாலோசித்து, தொழில் வளர்ச்சி -- ஒழுங்குமுறைச் சட்டத்தின்கீழ் மற்றொரு (ஏற்கனவே மூடப்பட்டுள்ள 6 ஆலைகள் சம்பந்தமான பிரச்சினை குறித்து ஆராய ஒரு குழுவினை மத்திய அரசு அமைத்திருப்பது தெரிந்ததே) தமிழக அரசு நியமிக்கும்"

என்று முதல்மைச்சர் அண்ணா அவர்கள், தென்னிந்திய ஆலைச் சொந்தக்காரர்களுடனும், பஞ்சாலைத் தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்திய பின் தெரிவித்தார். மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"இந்தப் புதிய குழுவுக்குத் தலைவரை நியமிக்கும்படி தமிழக அரசு, மத்திய அரசைக் கேட்டுக் கொள்ளும்; தலைவர் நியமிக்கப்பட்டதும், பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தாமதமின்றித் தமது பணியை, குழுவினர் துவங்குவர்."

முதலமைச்சர் அண்ணா அவர்கள் மேலும் தெரிவித்திருப்பதாவது:—

"நூல்மீது மிதமிஞ்சிய சுங்க வரி (எக்சைஸ் தீர்வை) விதிக்கப்பட்டிருப்பதால், தங்களுக்குள்ள சங்கடங்கள் பற்றி ஆலை அதிபர்கள் குறிப்பிட்டுக் கூறினர்.

'இந்தச் சுமையைக் குறைக்க வேண்டியதன் அவசியம் பற்றி மத்திய அரசிடம் தமிழக அரசு வலியுறுத்த வேண்டும்' என்றும் அவர்கள் கோரினர்; 'இதுபற்றி மத்திய அரசை அணுகி நிவாரணம் பெற்றுத் தர முயற்சிக்கிறேன்' என்று அவர்களிடம் உறுதியளித்திருக்கிறேன்.

"சில நெசவாலை அதிபர்கள், தத்தம் ஆலைகளை நவீனமயமாக்கவும், உற்பத்தியை அதிகரிக்கவும் நிதியுதவி கோரினர்; இது பற்றிக் கவனிக்கும்படி மாநிலத் தொழில்துறை அதிகாரிகளிடம் கூறியிருக்கிறேன்."

நம் நாடு

ஆசிரியர்: இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 1999 வைகாசி 12 (25—5—68) சனி

# உதவியைக் காட்டி உதவித் தொகையைக் குறைக்கலாமா?

உயர்தரமான மருத்துவ வசதிகள் அனைத்தும், பெரும் நகரங்களையே முதலிடமாகக் கொண்டுள்ளன. அவ்வசதிகள் மேன்மேலும் பெருக்கப்பட்டும் வருகின்றன.

இவ்வாறு முதல்தரமான மருத்துவ வசதிகள் பெரும் நகரங்களில் இடம் பெற்றிருப்பதையோ, அவை விரிவுபடுத்தப்பட்டு வருவதையோ தவறு எனக் கொள்வதற்கில்லை; அதில் குறை காண்பதற்கும் இடமில்லை.

பெரும் நகரங்களில், மக்கள் தொகை நாளுக்கு நாள் மிகவும் விரைந்து பெருகிக்கொண்டு வருகிறது. இம்மக்கள் தொகை பெருகப் பெருக, அதற்கேற்ப மருத்துவ வசதிகளும் விரிவுபடுத்தப்பட்டாக வேண்டும். இக்கோணத்திலிருந்துதான், நகரங்களில் மருத்துவ வசதிகள் விரிவடைந்து வருவது பாராட்டுதற்குரியதாகிறது.

பெரும் நகரங்களில் மருததுவ வசதிகள் மேன்மேலும் விரிவாக்கப்பட்டு வருகிறது என்றாலும், வளர்ந்து வரும் மக்கள் தொகைக்கேற்ப அவ்வசதிகள் விரிவாக்கப்பட்டுள்ளனவா என்றால், வருத்தத்துடன், 'இல்லை' என்றுதான் குறிப்பிட வேண்டியதாக உள்ளது. உள்ள மருத்துவ வசதியில் சிறிதளவு கூட்டப்பட்டால், அதை, 'தேவையின் அளவுக்குக் குறைவானது' எனக் கொள்ளத்தக்க வகையில், மக்கள் தொகை பெருக்கெடுத்து விடுகிறது. மீண்டும், 'மருத்துவ வசதி குறைவு' என்ற பற்றுக்குறை தலைதூக்கிவிடுகிறது.

'நகரங்களில் பெருகி வரக்கூடிய மக்கள் தொகைக்கேற்ப, மருத்துவ வசதிகளைப் பெருக்க முடியவில்லையே' என்ற ஏக்கம் அரசுக்கு! 'தேவையான மருத்துவ வசதி காலாகாலத்தில் கிடைத்திடவில்லையே' என்ற ஏக்கம் மக்களுக்கு!

மக்கள் அனைவரும் மனநிறைவு கொள்ளத்தக்க வகையில் மருத்துவ வசதிகளைப் பெருக்க—மக்களுக்கு இருந்திடக்கூடிய விருப்பத்தைவிட—பன்மடங்கு விருப்பமும் ஆசையும் இருந்திட்டாலும், அவ்விருப்பத்தையும் ஆசையையும், 'நாம் நினைக்கின்ற வண்ணம் காலாகாலத்தில் நிறைவேற்றி வைத்திடப் போதிய நிதி வசதி இல்லையே' என்ற பெரும் கவலை அரசுக்கு!

உயர்தரமான மருத்துவ வசதிகள் நகரங்களில் கிடைக்கின்றன என்றாலும், அவை பற்றுக்குறையாகவே இருந்துவருகின்றன என்பதை மறுப்பதற்கில்லை. நகரங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மருத்துவ வசதிகள் பற்றுக்குறையாக இருந்திட்டபோதிலும், இவ்வசதிகளில் சிறிதளவேனும் பெற்றில்லாத சிற்றூர்களிலும், அவற்றைச் சார்ந்துள்ள பகுதிகளிலும் வாழ்ந்துவருகின்ற மக்கள், நகரங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மருத்துவ வசதிகளைக் கண்டு முணுமுணுக்கும் நிலை இருந்துவருகிறது. அம்மக்கள் முணுமுணுப்பில் நியாயமுண்டு. அவ்வாறு அம்மக்கள் முணுமுணுப்பது இயற்கையுமாகும்.

நகரங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது போன்ற மருத்துவ வசதிகள், 'எங்களுக்கும் தேவை' என்பது சிற்றூர் மக்களின் கோரிக்கையல்ல. அக்கோரிக்கை 'பொருளற்றது' என்ற உண்மையையும், அதற்காகக்கூடிய பெருந்தொகைச் செலவையும் சிற்றூர் மக்கள் தெள்ளத் தெளிய தெரிந்துகொண்டே உள்ளனர்.

மருத்துவ வசதி பற்றி சிற்றூர் மக்கள் கோருவதெல்லாம், ஆரம்ப மருத்துவச் சிகிச்சை பற்றியதேயாகும். ஆரம்பச் சிகிச்சை அளிப்பதற்கான மருத்துவ வசதிகள் செய்யப்பட்டில்லாத சிற்றூர்களும், அவற்றைச் சார்ந்துள்ள பகுதிகளும், தமிழகத்தில் இருக்கத்தான் செய்கின்றன.

இருபதாண்டுக்காலக் காங்கிரசு ஆட்சிக்குப் பின்னரும், மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களை 'செம்மை'யாக நிறைவேற்றிவிட்டதற்குப் பின்னரும், 'ஆரம்ப மருத்துவ வசதிகளைக்கூடப் பெற்றில்லாத சிற்றூர்கள் பல இப்பொழுதும் இருந்துவருகின்றன' என்ற உண்மை, வேதனையையும் வருத்தத்தையும் ஒருங்கே அளிக்கவல்லதாகும்.

'சிற்றூர்கள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன; சிற்றூர்களின் உழைப்பில் நகரங்கள் வளம்பெற்று வருகின்றன' என்ற கருத்துக்கு அடிப்படை இருந்திட்டாலும் இல்லாமற் போனாலும், அக்கருத்து, சிற்றூர் மக்களிடம் பரவலாக இருந்துவருகிறது என்பது உண்மையாகும். மருத்துவ வசதி பற்றிய துறையிலும் சிற்றூர் மக்களுக்கு அதிருப்தி நீடித்திருந்து வருகிறது என்பதை மறைப்பதற்கில்லை.

இதுபற்றி நமது சுகாதார அமைச்சர் சாதிக் பாட்சா அவர்கள்; தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்த மாரண்டஅள்ளி எனும் சிற்றூரில், ஆரம்பச் சுகாதார அமைப்பு ஒன்றைத் திறந்துவைத்து, தம் கருத்தை அறிவித்திருக்கின்றார்கள். 'கிராமப்புற மருத்துவ வசதிகளைப் பொறுத்தவரையில், சேலம், தர்மபுரி, இராமநாதபுரம் ஆகிய மூன்று மாவட்டங்களிலும் உயர்ந்த அளவில் பற்றுக்குறை இருந்துவருகிறது' என அழுத்தந்திருத்தமாக அறிவித்திருக்கின்றார். 'மேற்படி மாவட்டங்களில்—குறைந்தபட்சமாக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும்—கிராமப்புற மருத்துவ அமைப்புக்கள் ஏற்படுத்தப்படவேண்டியது இன்றியமையாததாகும்' எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

தாம் குறிப்பிட்டுக் காட்டிய மருத்துவ ஏற்பாடுகளைச் செய்யத் தேவைப்படும் நிதிக்காக, **அமெரிக்கக் 'கேர் நிறுவன'த்தைக்** கோரியதாகவும், அக்கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, ஆரம்பச் சுகாதார வசதிகளுக்கான கட்டிடங்களைக் கட்ட ரூ. 8 கோடி அளவுக்கு நிதியுதவி அளிக்க அந்த நிறுவனம் ஒப்புதல் தந்துள்ளதாகவும் சுகாதார அமைச்சர் அறிவித்தார். இந்த நிதியுதவி பற்றிய செய்தி, அனைவருக்கும் மகிழ்ச்சி தருவதாகும்.

இக்களிப்பூட்டும் செய்தியை வெளியிட்ட அதேநேரத்தில், மற்றொரு கவலை அளிக்கின்ற செய்தியையும் அமைச்சர் அவர்கள் கூறியிருக்கின்றார். அதாவது, அமெரிக்கக் 'கேர்' நிறுவனம் தரக்கூடிய 8 கோடி ரூபாய் நிதியுதவியைத் தமிழக அரசு ஏற்றுக்கொள்ளுவதில் தமக்கு ஆட்சேபனை இல்லையென்றும், ஆனால், சுகாதார வசதிகளைச் செய்ய நான்காவது திட்டத்தில் தான் தரக்கூடிய நிதியுதவியில், அமெரிக்க நிறுவனம் தரக்கூடிய உதவித் தொகையின் அளவுக்குக் குறைத்துக்கொள்ளப்படும் என்றும் இந்திய அரசின் சுகாதார அமைச்சகம் திட்டவட்டமாக அறிவித்திருக்கிறது என்பதாகும்.

இந்திய அரசின் இப்போக்கு, 'துரதிருஷ்டவசமானது' என்கிறார் நமது சுகாதார அமைச்சர். இந்திய அரசு மேற்கூறிய கருத்தைக் கூறியிருந்தபோதிலும், நமது சுகாதார அமைச்சர், இந்திய அரசை விட்டுவிடுவதாக இல்லை. 'உதவித் தொகையைக் குறைத்துக்கொள்ளக் கூடாது' என இந்திய அரசை நமது சுகாதார அமைச்சர் மீண்டும் மீண்டும் வற்புறுத்திக்கொண்டிருக்கின்றார்.

சுகாதார அமைச்சர் பங்கு கொண்ட இவ்விழாவில், அம்மாவட்டத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான இராசாராம் அவர்களும், கமலநாதன் அவர்களும் இருந்திருக்கின்றனர். 'மத்திய சுகாதார அமைச்சரைச் சந்தித்து, தமிழக அரசின் கோரிக்கையை வற்புறுத்த வேண்டும்' என்றும் நமது அமைச்சர் வேண்டிக்கொண்டிருக்கின்றார்.

தமது சொந்த முயற்சியால் 'கேர்' நிறுவனத்திடமிருந்து பெறக்கூடிய 8-கோடி ரூபாய்க்கு தான் உரிமை கொண்டாடுவதும், அத்தொகையின் அளவுக்குத் தனது பங்கைத் குறைத்துக்கொள்ள இந்திய அரசு சுகாதார அமைச்சுத் துறை கருததுக் கொண்டிருப்பதும் வியப்பளிக்கின்ற வேதனையாகும். 'கேர்' நிறுவனம் மானியமாகத் தர ஒப்பியுள்ள 8-கோடி ரூபாயை, தான் நேரடியாகப் பெற்றுக்கொண்டு, அதே தொகையை தமிழக அரசுக்குக் கடனாகக் கொடுக்க இந்திய அரசு முடிவு கட்டிக்கொள்ளாமல்—ஏதோ தமிழக அரசின்பால் கருணை காட்டி—அத்தொகை அளவுக்குத் தான் கொடுத்திடக்கூடிய நிதியை வெட்டிவிடவாவது கருத்துக் கொண்டிருப்பது, மகிழ்ச்சி கொள்ளக்கூடியதாகும்

—கா. க.

## எண்ணெய் வள ஆய்வுப் பணிக்கு முற்றுப்புள்ளி?

### தமிழக அரசின் கோரிக்கை மறுக்கப்பட்டதா?

புதுடில்லி, மே 24—

காரைக்கால் வட்டாரத்தில் நடப்பு ஆண்டிற்குள் எண்ணெய் கண்டுபிடிக்கப்படாவிடில், எண்ணெய் எரிவாயுக் குழுவின் எண்ணெய்க் கிணறு தோண்டும் திட்டம் அநேகமாகக் கைவிடப்படுமாம்!

இப்பகுதியில் நிலத்தைத் துளையிடும் வேலைகள் 1964-ல் துவங்கின; இதுவரையில், நான்கு கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. தற்போது துரைக்குடியில் 5-வது கிணறு தோண்டப்படுகிறது. நடப்பு ஆண்டு இறுதியில் 6-வது கிணறு தோண்டுவதற்குக் குழு திட்டமிட்டுள்ளது. இந்தக் கிணற்றிலும் எண்ணெய் கிடைக்காவிடில், இப்பகுதியில் எண்ணெய் வள ஆராய்ச்சி கைவிடப்படுமாம்.

காரைக்கால் பகுதியில் எண்ணெய் வளம் உள்ளதாக இரஷ்ய நிபுணர்கள் கருதினர்.

ஆனால், எண்ணெய் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கும்வரையில், துளையிடும் வேலையை நீடிக்குமாறு குழுவைத் தமிழக அரசு வலியுறுத்திவருவதாகக் கூறப்பட்டது; இத்தகவலை எண்ணெய் எரிவாயுக் குழு மறுத்திருக்கிறது.

## திறந்தவெளிச் சிறை

### தமிழக அரசின் திட்டம்

மதுரை, மே 24—

'மத்திய சிறைச்சாலைகளை அடுத்து திறந்தவெளிச் சிறைச்சாலைகளை ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசிலனையில் இருக்கிறது"

என்று சட்டத்துறை அமைச்சர் செ. மாதவன் இங்கு கூறினார்.

மத்திய சிறைச்சாலை அதிகாரிகளிடம் இத்தகைய திறந்தவெளிச் சிறைகளை ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளையும், அதற்கான இட வசதிகளையும் குறித்து ஆலோசித்து முடிவு தெரிவிக்குமாறு அரசு கேட்டிருக்கிறது; அவர்களிடமிருந்து அரசு பதிலை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது" என்றும் அவர் கூறினார்.

## மூன்று நாள் பேசியும் மொழிப் பிரச்சினையில் ஒருமித்த முடிவு ஏற்படவில்லை!

### பல்கலைக் கழக ஆசிரியர்கள் — மாணவர்கள் நடத்திய கருத்தரங்கு

### தென்னகத்தைச் சேர்ந்தவர்கள் இந்தியை ஏற்கவில்லை

பம்பாய், மே 23—

**இங்கு கடந்த மூன்று நாட்களாக நடந்த அனைத்திந்தியப் பல்கலைக் கழக ஆசிரியர்கள்—மாணவர்கள் முகாமில், மொழிப் பிரச்சினை குறித்து ஒருமித்த முடிவு ஏற்படவில்லை.**

மொழி, தேசிய ஒருமைப்பாடு, கல்வி போன்ற—நாட்டின் முக்கிய பிரச்சினைகளைப் பற்றி அவர்கள், நான்கு பிரிவுகளாகப் பிரிந்து ஆராய்ந்தனர்.

**வட்டாரங்கட்கிடையே தொடர்பு மொழியாக எதை வைத்துக் கொள்வது என்பதிலே கடும் கருத்து வேறுபாடு நிலவியது.**

"மாநிலங்களுக்கிடையேயும், வட்டாரங்களுக்கிடையேயும் இந்தியும் ஆங்கிலமும் தொடர்பு மொழிகளாக இருக்க வேண்டும்" என்று ஒரு சாரார் விரும்பினர்.

'வட்டாரத் தொடர்பு மொழி என்ற ஒன்று தேவையில்லை' எனத் தென்னாட்டைச் சேர்ந்தவர்கள் கருத்தறிவித்தனர். இருமொழிக் கொள்கைக்கே (வட்டார மொழியும், ஆங்கிலமும்) அவர்கள் ஆதரவு தெரிவித்தனர்.

பள்ளிகளில் வட்டார மொழியே பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்பதிலும், அறிவு வளர்ச்சிக்கும், அறிவியல் அறிவு பெறவும் ஆங்கிலத்தைக் கற்றுக்கொள்ளவேண்டும் என்பதிலும் கருத்து வேறுபாடு இல்லை.

முகாமுக்குத் தலைமை வகித்த திரு. கே. எம். முன்ஷி, விவாதத்தில் இடையிடையே குறுக்கிட்டுக் கருத்தறிவித்தார்; 'உயர்தரக் கல்விக்கும், உயர்மட்டத் தொடர்புக்கும் பொது மொழியாகத் தன்னை ஆக்கிக்கொண்டிருக்கும் ஆங்கில மொழியை இந்தியாவிலிருந்து ஒழிக்கப்பட்டுவிடக்கூடாது' என்றார் அவர்.

"இந்திக்கு உண்மையிலேயே ஆதரவு தேடவேண்டும் என்று விரும்புபவர்கள், இப்படிப்பட்ட விவாதங்களில் கலந்துகொள்ளும்போது பொறுமையையும், அமைதியையும் கடைபிடிக்க வேண்டும்" என்று திரு. முன்ஷி அறிவுறுத்தினர்.

## அல்ஜீரியப் பத்திரிகையாளருடன் அறிஞர் அண்ணா

### அந்நாட்டு மக்கள் வாழ்க்கை முறைபற்றிக் கேட்டறிந்தார்

சென்னை, மே 24—

சென்னைக்கு வந்திருந்த அல்ஜீரியப் பத்திரிகையாளர் குழுவினர் முதலமைச்சர் அண்ணா அவர்களைச் சந்தித்தனர்.

அல்ஜீரிய நாட்டு வாழ்க்கையின் பல்வேறு அம்சங்கள் குறித்து அண்ணா அவர்கள், பத்திரிகையாளரிடம் விசாரித்தார்.

சென்னையில் நடந்த உலகத் தமிழ் மாநாட்டு அடையாளச் சின்னங்களை அப்பத்திரிகையாளருக்கு அண்ணா அவர்கள், அன்பளிப்பாக வழங்கினார்கள்.

அல்ஜீரியப் பத்திரிகையாளர்கள், பெரம்பூரிலுள்ள இரயில் பெட்டித் தொழிற்சாலையையும், ஜமாலியா அராபியக் கல்லூரியையும் பார்வையிட்டனர்.

## குடும்ப நல்வாழ்வு

### மருத்துவ நிலையங்களின் பங்கு

புதுடில்லி, மே 25—

நாட்டிலுள்ள 9,540 மருத்துவ நிறுவனங்களிலும், மருத்துவமனைகளிலும், மருந்தகங்களிலும் குடும்பக் கட்டுப்பாடு பற்றி ஆலோசனை தரப்படும். இந்த இடங்களில் கருத்தடைக் கருவிகளும் வழங்கப்படும்.

கிராமப் பகுதிகளில் 8,194 நிலையங்களும், நகரப் பகுதிகளில் 1,346 நிலையங்களும் இயங்கிவரும். இவற்றைத் தவிர ஏற்கனவே உள்ள குடும்பக் கட்டுப்பாடு நிலையங்களும், துணை நிலையங்களும் இயங்கிவரும்.

1967—68-ல் புதிய குடும்ப நல்வாழ்வு திட்ட நிலையங்கள் நகரப் பகுதிகளில் துவக்கப்பட்டன. இவற்றைச் சேர்த்து மொத்தம் 1,741 நிலையங்கள் இருக்கின்றன.

அதேபோன்று, கிராமப் பகுதிகளில் 4,634 குடும்ப நல்வாழ்வுத் திட்ட நிலையங்களும், துணை நிலையங்களும் கூடுதலாகத் திறக்கப்பட்டன. இவற்றுடன் தற்போதுள்ள நிலையங்களின் எண்ணிக்கை 24,230 ஆகும்.

## வியட்நாம் குழந்தைகளுக்கு மருத்துவ உதவி

வியட்நாம் போரில் சாயமடைந்த குழந்தைகளுக்கு மருத்துவ உதவி அளித்து பராமரிப்பதற்காக டென்மார்க், ஜெர்மன் ஆகிய இருநாடுகளும் ஒன்று சேர்ந்து இயக்கம் தொடங்கியுள்ளன. டென்மார்க் விமானம் ஒன்றில் 35 வியட்நாம் குழந்தைகள் கொண்டு வரப்பட்டன. இக்குழந்தைகள் பல்வேறு மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுகிறார்கள்.

# கணவன்-மனைவியைச் சவுக்குக் கட்டையால் தாக்கினர்!

## காங்கிரசுக் குண்டர்களின் வெறிச்செயல்

திண்டுக்கல் நகர் சின்னுளப்பட்டி என். அண்ணமலை (வஸ் தாவ்) என்பவர், சுயமரியாதை இயக்கக் காலம் முதல் கழகப் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்.

அவருடைய துணைவியார் இராசம்மாள் தண்ணீர் எடுக்கப் போன போது சின்னக்காளை என்னும் நபர் அவதூருகப் பேசியதாகவும், திரு. எஸ். அண்ணமலை 'பெண்களை இழிவுபடுத்திப் பேசாதே' என்று கூறியதால் அவரை அடித்துக் கீழே தள்ளிவிட்டதாகவும், இதை வேடிக்கை பார்த்துக் சொண்டிருந்த காங்கிரசுக்காரர்கள் நான்கு பேர் (அப்பகுதியில் அண்ணமலை சழக வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு வருவதை முன் விரோதமாகக்கொண்டு) இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு சின்னக்காளையுடன் சேர்ந்து விறகுக் கட்டையால் கணவன்—மனைவி இருவரையும் கடுமையாசத் தாக்கிக் காயப்படுத்திவிட்டுச் சென்றனர் என்றும் தகவல் கிடைத்துள்ளது.

சழகத் தோழர்கள் திண்டுக்கல் மருத்துவமனையில் அவரைச் சேர்ப்பித்தனர். அம்பாதுரை போலீசு சப்-இன்ஸ்பெக்டர், அந்த ஐந்து நபர்கள் மீதும் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்திவருகிறுர்.

# 'நம்பிக்கைத் துரோகம் என்பதை உணர்ந்துள்ளோம்'

## 'சட்டத்தை மாற்றும் எண்ணம் சிறிதேனும் இல்லை'

### பிரிட்டனின் நல்லெண்ணம்—அமைச்சர் தரும் உறுதி

'பிரிட்டனில் குடியேறியுள்ள பிற நாட்டவரை, அவர்களது விருப்பத்திற்கு மாருக, தாயகத்திற்குத் திருப்பி அனுப்பும் நோக்கம் இந்த ஆசாங்கத்திற்குக் கிடையாது.

"இங்கு வந்து குடியேறியுள்ளவர்களுடன் அவர்களது மனைவி, குழந்தைகள் வந்து சேர்ந்து கொள்வதைத் தற்போதைய சட்டம் அனுமதிக்கிறது; இதனை மாற்றும் எண்ணமும் இந்த அரசுக்குக் கிடையாது. அப்படி மாற்றுவது பெரிய நம்பிக்கைத் துரோகமான செயல் என்பதை நாங்கள் உணர்ந்துள்ளோம்.

"இங்குள்ளவர்கள் தொடர்ந்து இங்கேயே இருக்க இயலாமல்—தாயகங்களுக்குச் செல்ல தாமே முன்வந்து—அதற்காக உதவி கோரினல், அவர்களுக்கு அரசாங்கம் தற்போது அளித்து வரும் உதவிகள் தொடர்ந்து வழங்கப்படும்"

என்று பிரிட்டிஷ் அரசின் உள்துறைத் துணை அமைச்சர் திரு. டேவிட் என்னல்ஸ் கூறினர்.

# நகராட்சித் தேர்தல்கள்

## அமைச்சர் முத்துசாமி தரும் தகவல்

மதுரை, மே 24—

"சென்னை மாநகராட்சித் தேர்தல் ஆகஸ்டுத் திங்களில் நடைபெறும் என்று முன்பு அறிவிக்கப்பட்டிருந்தது; அதை, செப்டம்பர் திங்களில் நடத்த உத்தேசித்திருக்கிறோம்; இதன் காரணமாக, மற்ற நகராட்சிகளின் தேர்தல்களும் சிறிது தள்ளிப்போடப்படும்.

"தமிழ் நாட்டில் எல்லா நகராட்சிக்கும் அக்டோபர் திங்களுக்குள் தேர்தல் நடந்து முடிந்து விடும்"

என்று உள்ளாட்சித் துறை அமைச்சர் மா. முத்துசாமி அவர்கள் விளக்கிக் கூறினர்.

# இந்தியாவில் தொத்து நோய்கள்

## ஏப்ரல் மாத நிலவரம்

புதுடில்லி, மே 24—

இந்தியாவில் கடந்த ஏப்ரல் மாதத்தில் நாட்டின் எப்பகுதியிலும் பிளேக் நோய் ஏற்பட்டதாகத் தகவல் இல்லை.

மத்தியப் பிரதேசம் தாட்டியா மாவட்டத்தில்கடுமையானஅம்மை நோய் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

தமிழ் நாட்டில் சென்னை நகரிலும், நீலகிரியிலும் இந்த நோய் இலேசாக இருந்ததாசத் தெரிய வருகிறது.

மைசூர் மாவட்டத்தில் கடுமையான காலரா ஏற்பட்டதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

தமிழ் நாட்டில் தருமபுரி, சென்னை நகரம், மதுரை, வடஆற்காடு, சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் காலரா நோய் இலேசாக இருந்தது.

# மாவட்டக் கோட்டா முறை எடுபடும்

## மாநிலம் முழுமைக்கும் ஒரே குழுதான் இயங்கும்

### மருத்துவக் கல்லூரிக்கு மாணவர் தேர்வு -- அமைச்சர் விளக்கம்

திருச்சி, மே 24—

இவ்வாண்டில், மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்கும் முறைபற்றி சுகாதார அமைச்சர் சாதிக் பாட்சா, பின்வருமாறு தெரிவித்துள்ளார்:—

"மாணவர்களைச் சேர்ப்பதற்குரிய தகுதி பற்றிய விதிகள் மாருது; சென்ற ஆண்டு இருந்ததுபோலவே இருக்கும்.

"நுழைவுத் தேர்வு நடத்தும் யோசனை கிடையாது.

தலைமை நீதிமன்றத் தீர்ப்பை அனுசரித்து, முன்பு இருந்த மாவட்டவாரி 'கோட்டா' முறை எடுபடும்; மாநிலம் முழுதும் ஒரு யூனிட்டாகக் கருதப்படும்.

சென்ற ஆண்டைப்போல் நான்கு தேர்வுக் குழுக்கள் இராது; ஒரே ஒரு குழுதான் இருக்கும்.

மதிப்பெண்களும், தேர்வுப் பட்டியலும் அழிக்கப்படாமல் வைக்கப்பட்டிருக்கும்.

அதிக இடங்கள் ஏற்படுத்தப் போவதில்லை. எல்லா மருத்துவக் கல்லூரிகளிலுமாகச் சேர்ந்து சென்ற ஆண்டைப் போல சுமார் 1,000 இடங்களே இருக்கும்.

தொழிற் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்ப்பதற்கான முறை இன்னும் இறுதியாக்கப்படவில்லை; முதலமைச்சருடன் இது பற்றி விவாதிக்கப்படும்.

இந்த ஆண்டு திருச்சியிலும், சேலத்திலும் மருத்துவக் கல்லூரியை துவக்கும் உத்தேசம் இல்லை.

அடுத்த மூன்று ஆண்டுகளில் டாக்டர்கள் உபரியாயிருக்கக் கூடும்.

கிராம சுகாதார நிலையங்களுக்கு டாக்டர்கள் கிடைப்பதில் சிரமம் எதுவும் இல்லையாதலால், மாநிலத்தில் டாக்டர்கள் கிராமங்களில் சேவை புரிவதைக் கட்டாயமாக்குவதற்கு அவசியமில்லை."



## நடக்க இருப்பவை

### 26--5--68

**சென்னை 9.-வது வட்டம்**
தமிழரசுக் கழகச் சார்பில் மாலை 6-30 மணிக்கு சூளைமேடு நெடுஞ்சாலையில் (நுங்கம்பாக்கம் இரயிலடி அருகில்) ; பேசுவோர் : ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ., ம. சீ. கிருஷ்ணமூர்த்தி பி.ஏ., கொ. மோ. சனார்த்தனம் பி.ஏ., பி.காம்., சி. ஞானமணி எல்.இ.இ., அருமைநாதன்.

**கரூர்**
தி. க.—தி. மு. க. சார்பில் சுயமரியாதைத் திருமணச் சட்ட நன்றியறிவிப்புக் கூட்டம் ; மாலை 7-மணிக்கு பசுபதிபாளையம் அண்ணா திடலில் ; தலைவர் : எம். வீரமுரசு ; பேசுவோர் : திருவாரூர் கே. தங்கராசு, எம். கோவிந்தசாமி, பரமத்தி சண்முகம், வேம்பரசு, எம். முத்துசாமி.

**சென்னை 50-வது வட்டம்**
தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு புரசை சண்முகராய பிள்ளை தெருவில் ; தலைவர் : இரா. கணேசன் ; பேசுவோர் : இரா. சனார்த்தனம், துரைமுருகன் பி.ஏ., என். ஆர். வீரசின்னு, வ. ப. இளங்கோவன், பார்வேந்தன், வி. குப்புசாமி.

**குகை - சேலம்**
26-வது வட்ட உதயசூரியின் படிப்பகம்—எம்.ஜி.ஆர். மன்றச் சார்பில் மாலை 6 மணிக்கு பட்டார பயிலில் ; தலைவர் : கே. செயராமன் பி.எஸ்சி ; பேசுவோர் : திருவை அண்ணாமலை, க. இராசாராம் எம்பி., கே. செயராமன் எம்.எல்.ஏ., ஈ. ஆர். கிருஷ்ணன் எம்.எல்.ஏ., சிற்றுளி சுப்பிரமணியம்.

### 27--5--68

**திண்டுக்கல்**
6-வது வட்ட தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு வேற்கு ரத வீதியில் (அண்ணா மன்றம் எதிரில்); தலைவர் : என். கோபால் ; பேசுவோர் : ஜி. பராங்குசம் எம்.எல்.சி., மு. காதர்சா பி.ஏ., க. அங்குசாமி எம்.சி., என். முத்து, வி. இ. பாலு, மற்றும் பலர்.

**குனியமுத்தூர்**
தி. மு. க. சார்பில் மாலை 7 மணிக்கு மாரியம்மன் கோயில் திடலில் ; பேசுவோர் : கே. என். இராமச்சந்திரன் எம்.எல்,ஏ., தங்கமாணிக்கம், இராமு, ப. தம்பி பி.காம்., மற்றும் பலர்.

**செம்பியக்குடி**
தி. மு. க. சார்பில் மாலை 7 மணிக்கு மெயின்ரோடு மேல் வளைவில் ; தலைவர் : பொ. துரைசாமி ; பேசுவோர் : மு. க. து. நடராசன் எம்.எல்.ஏ., கோ. சிவப்பெருமாள், தஞ்சை தமிழ்மணி. (முருகு பாண்டியன் குழுவினர் கலை நிகழ்ச்சி நடைபெறும்).

## சி. பி. சிற்றரசு

**சுற்றுப்பயணம்**

மே 26, 27, 28 : கோவைப் பகுதிகள்; 29: வெள்ளக்கோயில்; 30 : ஈரோடு ; 31, ஜுன் 1 : அவிஞசி வட்டம் ; 2 : கோவை, நடுவட்டம், உதகை, கோத்தகிரி, கூனூர்.

## பாலர் அரங்கம்

மே 25, 26-ந் தேதிகளில்
மாலை 4-மணிக்கு

**'டார்ஜானும் வேங்கைப் பெண்மணியும்'**

(எம்.ஜி.எம். படம்)

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

# மீனவர்கள் நலனில் கழக அரசு காட்டும் அக்கறை

## காங்கிரசு ஆட்சிக்காலத்தில் சாதித்தது என்ன?

### காங்கிரசு ஏட்டின் புரளிக்கு அமைச்சர் ஏ. கோவிந்தசாமியின் மறுப்பு

தமிழகத்தில் வேற்று மாநிலத்தவரும் வியந்து பாராட்டும் அளவுக்கு ஆட்சி நடத்திவரும் கழக அரசுக்குக் களங்கம் ஏற்படுத்த வேண்டுமென்று—பல கற்பனைச் செய்திகளைக் 'கயிறு திரித்து' மக்களை நம்பவைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள காங்கிரசு நாளிதழ்களில் ஒன்று, தமிழக அரசையும், வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி அவர்களையும் குற்றஞ்சாட்டும் வகையில், மீன்வளத் துறைத் தொடர்பாக ஆதாரமற்ற ஒரு பொய்த் தகவலை வெளியிட்டிருப்பதாக அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்களின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

உடன், அந்தச் செய்தியை மறுத்து அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்கள், ஓர் அறிக்கை வாயிலாக விளக்கியுள்ளார் ; அது வருமாறு :—

### 'பொய்' எங்கேனும் 'மெய்'யாகிவிடுமா ?

20—5—68 தேதியிட்ட 'ஜெயக்கொடி' என்ற இதழில், முதலாவதாக—

> "காங்கிரசு அரசு மீனவர்களுக்கு விநியோகிக்க ஆண்டொன்றுக்கு 240 படகுகளைக் கட்டி ஆறு மாதத்திற்கு ஒரு முறை 120 படகுகள்விதம் பகிர்ந்தளித்து வந்தது"

எனக் கூறப்பட்டிருக்கிறது ; இச் செய்தி ஆதாரமற்றதாகும்.

**" 1965–66-ல் 143 படகுகளும், 1966—67-ல் 135 படகுகளும் தான் கட்டி முடிக்கப்பட்டன.**

**" விநியோகத்தைப் பொறுத்த மட்டில் 1965—66-ல் 117 படகுகளும், 1966—67-ல் 118 படகுகளும்தான் பகிர்ந்தளிக்கப்பட்டன.**

**" மேலும், எந்த ஓர் ஆண்டிலும் 140 படகுகளுக்குமேல் கட்டப்படவேயில்லை "**

என்ற உண்மையே, அந்த இதழின் குற்றச்சாட்டைப் பொய்பிக்கப் போதிய சான்றாகும்.

### ஆட்சிப் பொறுப்பு மாறப்போவது தெரிந்தும்...!

இரண்டாவதாக அந்த இதழில் கூறப்பட்டிருப்பதாவது :—

> "இன்றைய அரசாங்கம் படகு கட்டுவதற்கான நிதி ஒதுக்கீட்டைக் குறைத்துவிட்டது ; முன்னைய அரசாங்கம் பொறுப்பை ஒப்படைக்கும்போது, பகிர்ந்தளித்து உத்தரவிட்ட 120 படகுகளில் 40 படகுகளுக்கான உத்தரவை நிறுத்தி வைத்துவிட்டது."

இதுபற்றிய உண்மைநிலை பின்வருமாறு :—

" முன்னைய அரசு தன் பொறுப்பை ஒப்படைப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பாக (தேர்தல் முடிவுகள் வெளிவந்த பிறகு) 107 படகுகள்தான் கட்டி முடிக்கப்பட்டுப் பகிர்ந்தளிப்புக்குத் தயாராக இருந்தன.

தேர்தல் முடிவுகள் வெளிவந்து முடிந்த அந்த ஒரு வார காலத்தில் (28-2-67, 1-3-67 தேதிகளில்) 138 படகுகளுக்கான பகிர்ந்தளிப்பு உத்தரவை முன்னாள் மீன்துறை அமைச்சர் திரு பூவராகன் பிறப்பித்தார்.

அரசுப் பொறுப்பை ஒப்படைக்கப்போவது தெளிவாகத் தெரிந்தும் பிறப்பிக்கப்பட்ட இந்த உத்தரவு, மிகவும் அவசரத்தில் செய்யப்பட்ட ஒன்று என்பது இதனால் தெளிவாகத் தெரிகிறது.

இது தவிர, கட்டி முடிக்கப்பெறாத 30 படகுகளுக்கான பகிர்ந்தளிப்பு உத்தரவையும் முன்னாள் அமைச்சர் பிறப்பித்தார்.

### முன்னைய அரசு உத்தரவுக்குப் பெருமதிப்புத் தந்தோம்

இன்றைய அரசு பொறுப்பேற்ற சில நாட்களில், முன்னாள் அரசு படகுகள் பகிர்ந்தளித்ததில் ஏற்பட்ட குறைகள் பற்றிப் பல புகார்கள் வந்தன. எனவே, முன்னைய அரசு உத்தரவிட்ட 138 படகுகள் பற்றிய பகிர்ந்தளிப்பை முழுவதுமாக மறுபரிசீலனை செய்து பகிர்ந்தளிப்பில் சட்டபூர்வமான சந்தேகங்கள் நிறைந்த 6 படகுகளின் விநியோகம் தவிர மற்றைய படகுகளின் பகிர்ந்தளிப்பு உத்தரவை இவ்வரசு உறுதி செய்தது.

முன்னைய அரசு பிறப்பித்த படகுகள் பகிர்ந்தளிப்பு உத்தரவை நிறுத்திவைப்பதை விடுத்து, கட்டி முடிக்கப் பெறாத படகுகளுக்கும் பகிர்ந்தளிப்பு உத்தரவிட்டதையும் அனுமதித்தது.

இன்றைய அரசு முன்னைய அரசின் உத்தரவிற்குத் தந்த பெருமதிப்புக்குப் போதிய எடுத்துக்காட்டாகும் இது."

மூன்றாவதாக அந்த இதழில் கூறப்பட்டிருப்பதாவது :—

> "1967—68-ம் ஆண்டிற்கான படகு கட்டும் திட்டம் குறைக்கப்பட்டுவிட்டது ; 1967—68-ம் ஆண்டுத் திட்டத்தில் படகுகள் பகிர்ந்தளிப்புப்படவில்லை ; இதனால் 240 படகுகளுக்கான ரூ. 96;00,000 எஞ்சியிருக்கிறது."

### மீனவர் நலனையா அரசு புறக்கணித்தது?

இதன் உண்மை நிலை வருமாறு :—

முன்னர் குறிப்பிட்டபடி எந்த ஓர் ஆண்டிலும் 240 படகுகள் கட்டுவதற்கான திட்டம் கிடையாது. இருப்பினும் இவ்வரசு, 1967—68-ல் 195 படகுகள் கட்டுவதற்கான திட்டத்தை மேற்கொண்டது.

பெரும் அளவில் எடுக்கப்பட்டுள்ள இந்தத் திட்டம், முன்னைய ஆண்டுகளில் செயல்படுத்தத் திட்டமிடப்படவில்லை.

இந்த 195 படகுகளில் பகிர்ந்தளிப்புக்குத் தயாராக உள்ள 138 படகுகளுக்கான உத்தரவு விரைவில் பிறப்பிக்கப்படும்.

படகுகள் பகிர்ந்தளிப்புக்காக ஆண்டுக்கொருமுறைதான் ஆண்டு முடிவில் உத்தரவிடப்படுகிறது என்பதும், அந்த இதழின் செய்தியில் கூறப்பட்டுள்ளதுபோல, அரையாண்டுக்கொருமுறை அல்ல என்பதும் குறிப்பிடத்தக்கது அவசியமாகும்.

'இன்றைய அரசு மீனவ சமுதாயத்தினரின் நலனைப் புறக்கணித்துவிட்டது' என்ற உண்மைக்குப் புறம்பானதோர் பொதுக் குற்றச்சாட்டும் கூறப்பட்டுள்ளது.

பட்ஜெட் ஒதுக்கீட்டில் மீன் வளவளர்ச்சிக்கு 1966—67-ல் கண்ட ரூ. 121.18 இலட்சம் செலவிற்கு எதிராக 1967—68-ல் ரூ 154.67 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இன்றைய அரசின் பண ஒதுக்கீட்டிலும் அதைப் பயன்படுத்தும் முறையிலும் மீன்வள வளர்ச்சியில் உயர்வே காணப்படுகிறது.

மீனவர்களின் சமூகப் பொருளாதார நிலையை உயர்த்த இவ்வரசு மேற்கொண்டுள்ள குறிப்பிடத்தக்க முயற்சிகளாவன :—

சென்னை, தூத்துக்குடி மீன்பிடித் துறைமுகங்களுக்கான மதிப்பீடுகளும், திட்டங்களும் முற்றுப்பெற்று அதற்கான வேலைகள் இவ்வாண்டிலேயே எடுத்துக் கொள்ளப்படும்.

சிறு மீன்பிடித் துறைமுகங்கள், படகுத்துறைகளைப் பொறுத்த மட்டில், கடலூரில் தடுப்புச் சுவர் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

நாகப்பட்டினத்தில் தூர் வாரும் வேலை எடுத்துக்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டது. கடலூர் முகத்துவாரத்திலுள்ள மணல் மேட்டைத் தூர் வாரும் வேலை அண்மையில் எடுத்துக் கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

சலுகை விலையில் மீனவர்களுக்கு விசைப் படகுகள் வழங்குவதைத் தவிர, ரூ 36,00,000 செலவில் 4 டிராலர்களை வாங்க இவ்வரசு ஏற்பாடு செய்துள்ளது.

இவ்வேற்பாடு, ஆழ்கடல் மீன் பிடிப்பதில் ஒரு புதிய சகாப்தத்தை உண்டாக்குவதுடன், நம் மாநில மீனவ சமுதாயத்திற்குப் பெரும் பயனையும்நல்கும்.

### மீன்வள வளர்ச்சிக்கு மற்றொரு திட்டம்

பிரெஞ்சு மீனவர்களின் ஒத்துழைப்புடன் இவ்வரசு மேற்கொண்டுள்ள மற்றொரு நடைமுறைச் சார்ந்த திட்டம் கீழைக் கடலோர மீன்வள வளர்ச்சிக்கான 'டோரிஸ்' திட்டமாகும்.

### கழக அரசு காட்டும் அக்கறைக்கு ஓர் எடுத்துக்காட்டு

இம்மாநில மீனவர்களுக்கு அறிமுகப்படுத்தப்படும் இந்தப் பிரெஞ்சுப் படகுகளுக்கு மீன் பிடித் துறைமுக வசதிகள் தேவையில்லை.

இத்துடன், மீன் இருப்பிடக் கண்டுபிடிப்புக்கான தனிக் கருவிகளையும் இப்படகுகள் பெற்றுள்ளன.

நம் நாட்டில் கட்டப்படும் இதர படகுகளின் விலையைக் காட்டிலும் இவைகளின் விலையும் மிகக் குறைவு.

மீனவர்களின் இடைவிடாத கோரிக்கைகளுக்கு இணங்க, அவர்கள் விரும்பும் 'யான்மார்' எஞ்சின் 102 இந்த ஓராண்டுக் காலத்தில் கழக அரசால் ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு மீனவர்களுக்கு வழங்கப்படும். அவைகள், விசைப் படகுகளில் பொருத்தத் தயாராக உள்ளன.

முன்னைய அரசு 1956-லிருந்து, 1967 வரை (பத்து ஆண்டுக் காலத்திற்கு) 130 'யான்மார்' எஞ்சின்கள்தான் வரவழைத்தது என்பதை இங்கு குறிப்பிடுவது இன்றைய அரசு, மீனவர் நலனில் காட்டும் அக்கறைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

### சமுதாயநலத் திட்டங்கள் உயிர்ப்பிக்கப்பட்டன !

முன்னைய அரசால் நிறுத்தி வைக்கப்பட்ட — மீனவர்களுக்கு வீடு கட்டும் திட்டம் போன்ற சமுதாய நலத் திட்டங்களை இவ்வரசு உயிர்ப்பித்தது.

தஞ்சை மாவட்டத்திலுள்ள அம்மாப்பட்டினத்தில் மீனவர்களுக்கு வீடுகள் கட்ட ரூ. 2.25 இலட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

கல்பாக்கம் அணுசக்தி திட்டத்தால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு வீடுகள் கட்ட ரூ. 2 37 இலட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இவை தவிர, 1968—69-ல் 100 வீடுகள் கட்டித் தர ரூ. 1-இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் உணவு விவசாய நிறுவனத்தின்மூலம் இம் மாநிலத்தில் முதன்முதலாகக் கட்டுமரச் சொந்தக்காரர்களுக்கு வழங்க ஐந்து 'அவுட்போர்டு' மோட்டார்களை இவ்வரசு பெற்றுள்ளது.

இவ்வரசு பொறுப்பேற்றவுடன், படகு கட்டும் நிலையப் பணியாளர்களுக்கு வசதிகளைச் செய்து தரும் பணியையும் மேற்கொண்டது.

144 அன்றாடத் தொழிலாளர்களின் வேலையை நிரந்தரப் பணியாக மாற்றியது.

நாளாவட்டத்தில் ஏனைய பணியாளர்களையும் இவ்வாறு மாற்றத் திட்டமுள்ளது.

பணியாளர்கள் தாங்களே பெரும்பாலான கருவிகளைக் கொண்டுவருவதைத் தவிர்த்து பெரும்பாலான கருவிகளை அவர்களுக்கு வாங்கித் தருமாறு படகு கட்டும் நிலையங்களுக்கு இவ்வரசு உத்தரவு பிறப்பித்தது.

சங்கு குளிப்பவருக்குக் கடந்த 7 ஆண்டுகளாக சங்கு ஒன்றுக்கு 47 காசு கொடுத்த நிலையை மாற்றி, 'சங்கு ஒன்றுக்கு 60 காசு' என்று உயர்த்திய இவ்வரசின் செயல், சங்கு குளிப்பில் ஈடுபட்டுள்ள மீனவர்களின் வாழ்க்கைத்தரத்தை கணிசமான அளவில் உயர்த்துவதற்காகப் பிறப்பித்துள்ள உத்தரவாகும்.

இவ்வரசு முயற்சிகள் பல மேற்கொண்டு — மத்திய அரசின் இணக்கத்தைப் பெற்று—வட்டார மீனவர் பயிற்சி நிலையம் ஒன்று சென்னை-இராயபுரத்தில் அண்மையில் நிறுவப்படவிருக்கிறது.

இந்நிலையம், படகு கட்டுவதில் மேம்பட்ட பயிற்சி—டீசல் எஞ்சின்களைப் பராமரித்தல்—கடல் இயல்—இன்ன பிற பயிற்சிகளை நல்கும்.

இப்பயிற்சி நிலையம், சுமார் 60 இலட்சம் செலவில் நிறுவப்படவிருக்கின்றது.

இத்திட்டம், நம் மாநில மீனவர்களுக்குப் பயனளிப்பதுடன் அண்மை மாநில மீனவர்களுக்கும் பயன் தரும்.

## தமிழக மின் குழு

**ஒப்பந்த அறிவிப்பு**

**ஸ்பெசிபிகேஷன் எண் C. 1047**

சென்னை மின் வழங்கு ஏற்பாடு—பேசின் பிரிட்ஜ் பவர் ஸ்டேஷன்—நான்காவது கட்ட விஸ்தரிப்பு—நிலக்கரியைப் பயன்படுத்தும் நிலையத்திற்கும் சாம்பல் கொட்டுவதற்குமான கட்டடத்துக்கு ஆர்.சி.சி. பைல் பவுண்டேஷன் அமைத்தல்—ஸ்பெசிபிகேஷன் எண் சி. 1047.

தமிழக மின் குழுவுக்காகவும் அதன் சார்பிலும் மேலே குறிப்பிட்டுள்ளபடி, மேலுறையில் குறிக்கப்பட்டு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் நகலுடன் கீழே கையெழுத்திட்டுள்ளவரால் 1968 ஜூலை 3-ஆம் நாள் புதன்கிழமை பகல் 12 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். இந்த ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் பிற்பகல் 2-30 மணிக்கு, நேரில் இருக்க விரும்பும் ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறந்து பார்க்கப்படும்.

வரை படங்களுடனும், பிற ஒப்பந்த நிபந்தனைகளுடனும் சி.1047 என்னுள்ள ஸ்பெசிபிகேஷன் பிரதிகளை கீழே கையொப்பமிட்டுள்ளவரின் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். ஒரு பிரதிக்கு விலையாக ரூ. 50-ம் (ரூபாய் ஐம்பது மட்டும்) விற்பனை வரியாக 3 சதவிகிதம் அதாவது ரூ. 1·50-ம் மணியார்டராகவோ ரொக்கமாகவோ 'அக்கௌண்ட்ஸ் ஆபீசர், மெட்ராஸ் எலக்ட்ரிக் சிஸ்டம் (விநியோகப் பகுதி), 157, மவுண்ட் ரோடு, சென்னை-2' என்ற முகவரியில் செலுத்தி அதற்கான இரசீதையும் இணைத்திட வேண்டும். அக்கௌண்ட்ஸ் ஆபீசரிடம் பணம் செலுத்தும்போது ஸ்பெசிபிகேஷன் **எண் சி. 1047** என்பது தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். இந்தத் தொகை எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித்தரப்பட மாட்டாது.

எந்த ஓர் ஒப்பந்தப் புள்ளியையோ அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையுமோ எந்தவிதக் காரணமும் கூறாமல் ரத்து செய்யும் அதிகாரம் மின் குழுவுக்கு உண்டு.

மேற்பார்வைப் பொறியர்,
தொழில் நுணுக்கப் பிரிவு,
(சிவில்)

157, மவுண்ட் ரோடு,
சென்னை-2